# வேலணை ம.ம.வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் நடாத்திய "கலாதீபம் 99"



வேலணை மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் கலை கலாச்சாரப் பிரிவினரால் நடாத்தப்பட்ட கலைவிழாவான கலாதீபம் 99 கடந்த ஒக்டோபர் 9ம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஸ்காபரோவிலுள்ள சேர்.ஜோன்.ஏ.மக்டொனால்ட் கல்லூரிக் கலையரங்கில் மண்டபம் நிறைந்த விழாவாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

யாழ்.தீபகற்பத்தின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள தீவுப்பகுதிகளில் தலைசிறந்த கலைக்கோயில் வேலணை மத்திய கல்லூரி என்றால்மிகையன்று. அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கனடாவில் இயங்கி வருவதுடன் கல்லூரிக்கும் தாயகத்தில் இன்னலுறும் மக்களுக்கும் உதவுவதனைத் தங்களது செயற்பாடுகளாகச் செயற்படுத்தி வருகின்றனர்.

இச்சங்கத்தின் கலை கலாச்சாரப்பிரிவினர் நடத்திய கலாதீபம் 99 கலைநிகழ்ச்சியானது பார்வையாளர்களின் ஏகோபித்த பாராட்டு தலைப் பெற்றமையை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். மிகக்குறுகிய காலத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட முதல் நிகழ்ச்சியாக இருந்த போதும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்ததுடன் நிகழ்ச்சிகளைத் தொய்வின்றி அரங்கேற்றியமை பாராட்டுக்குரியதே.

முதலில் மறைந்த போராளிகளுக்கும் மக்களுக்குமான மௌன அஞ்சலியும் ஆரம்பித்த விழாவில் அடுத்து தமிழ்த்தாய் வாழ்த்து. கல்லூரிக் கீதம், கனடா தேசிய கீதம் போன்ற நிகழ்ச்சிகளின் பின்னர் கல்லூரியின் பழைய மாணவனும் முன்னாள் ஆசிரியரும் ஓய்வுபெற்ற அதிபருமான திரு.க.சிவராமலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் தமதுரையில் சுருக்கமாக கல்லூரியின் வரலாறு பற்றியும், கல்லூரிக்கு பழைய மாணவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

பின்னர் திருமதி நிர்மலா சுரேஷ், திருமதி சிவசக்தி சௌந்தரராஜன் ஆகியோரது மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் தீவகம் வே.இராசலிங்கம் அவர்களது தலைமையில் எங்கள் மண்ணும் அந்த நாட்களும் என்ற கவியரங்கமும் இடம் பெற்றது.

அடுத்து பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு சி.இளஞ்செழியன் அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தமதுரையில் பெற்ற தாயையும் கல்வியறிவூட்டிய கல்லூரியையும் பிறந்த பொன்னாட்டையும் மறக்காது காலமெல்லாம் கருத்தில் வைத்திருக்க வேண்டியது ஒவ்வொரிவரினதும் கடமையாகும் என்றும் அதற்காகவே இன்று நாம் ஒன்று கூடியுள்ளோம் என்றார்.அத்துடன் எமக்கு அறிவூட்டி உயர்ந்த நிலைக்கு உயர்த்தியதுடன் அவையத்துள் முந்தியிருக்கச் செய்து வளமான வாழ்வில் திளைக்க வைத்த கல்லூரி அன்னைக்கு நாம் ஆற்றவேண்டிய நன்றிக்கடன் நிறையவுள்ளது. அதை எம்மாலியன்ற வரை நிறைவேற்ற வேண்டும் என்றார்.

விழாவிற்குக் கிடைத்த வரவேற்பிலும் பார்க்க விழாமலருக்கு அதிக பாராட்டுக் கிடைத்ததை அறியக்கூடியதாக இருந்தது. கலாதீபம் 99 விழாமலரை கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளருமான திரு ந.பேரின்பநாதன் அவர்கள் வெளியிட்டு முதலாவது மலரை விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்த கல்லூரியின் பழைய மாணவரும் தற்போது அமெரிக்காவிலுள்ள சின்சினாற்றிப் பல்கலைக்கழகத்தில் புள்ளிவிபரவியல் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர் சு.சிவகணேசன் அவர்களிடம் கையளித்தார்.

விழா மலரைப் பெற்றுக் கொண்டு திரு சிவகணேசன் உரையாற்றுகையில் தாம் வேலணை ம.ம.வி. இல் பெற்ற அறிவும் பண்பும் தனது வாழ்க்கையில் முக்கிய வழிகாட்டியாக இருந்து வருகின்றன என்ற போது சபையோர் பலத்த கரகோஷம் செய்தனர். அத்துடன் எமது கல்லூரி வாழ்க்கை அனுபவத்தை மேற்கத்தைய நாடுகளில் வாழும் எமது பிள்ளைகளின் கல்லூரி அனுபவத்துடன் ஒப்பிட்டால் மிகவும் பரிதாபகரமாகவும் கவலையாகவும் உள்ளது என்றார். இதை நிவர்த்தி செய்வதற்கு பெற்றோராகிய நாங்கள் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முயற்சிகளில் பங்கெடுத்து ஆதரவு செய்வதால் அது எமது கலாச்சாரத்தில் நாம் வைத்துள்ள நம்பிக்கையை பிள்ளைகளுக்கு செயலளவில் எடுத்துக்காட்டுவதாக அமைவதுடன் அது கல்லூரியின் மாணவர்கட்கு மட்டுமன்றி எமது பிள்ளைகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

அடுத்து திருமதி சிவாஜினி ஸ்ரீஸ்கந்தராசா அவர்களது மாணவிகளது நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் செல்வி ஆரதி சிவபாலனின் மெல்லிசை நிகழ்ச்சியானது நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் அமைந்தது எனலாம். வெள்ளையின இளைஞர் பக்கவாத்தியம் வாசித்தது எம்மவர் அனைவருக்கும் ஓர் ஊக்கத்தை ஏற்படுத்தியதாகச் சபையில் பேசிக் கொண்டதை கேட்கக்கூடியதாக இருந்ததுடன் ஓர் சங்கீத பரம்பரையில் வந்தவர் என்பதையும் நிருபித்துள்ளார் என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

அடுத்து கல்லூரியில் க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் 1963ம் ஆண்டில் முதன்முதல் கல்லூரியில் இருந்து விஞ்ஞான பீடத்திற்கு பல்கலைக் கழகம் சென்ற பழைய மாணவராக திரு வைத்திலிங்கம் சிவநாதன் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

கலகலப்பு தீசனின் இங்கேருங்கோ ஈ.மெயில் வந்திருக்கு என்ற நாடகம் சபையோர் அனைவரையும் சிரிக்க வைத்தது. கல்லூரியின் பழைய மாணவர் எஸ்.கோகுலதாசனும், புங்கையூர் இதயஜீவனும் இணைந்து வழங்கிய வெள்ளைக்கடற்கரையினிலே நாடகம் அனைவரையும் தாயக மண்ணிற்கு இழுத்துச் சென்றதுடன் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது எனலாம்.

விழா நிறைவாக நடைபெற்ற நாவலன் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி எல்லோரையும் திருப்தியுடன் அரங்கை விட்டுச் செல்ல வைத்த நிகழ்ச்சியெனலாம்.

செயலாளர் திரு பாஸ்கரன் அவர்களது நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது. கலாரசிகர்களும் - சிறந்ததொரு கலைநிகழ்வைப் பார்த்து, ரசித்த மனநிறைவோடு இல்லம் ஏகினர். — **தீவகன்**